# ஜெயங்கொண்டம் நகராட்சி

| Date of Meeting of the Council | MCR NO | SERIAL NUMBER AND SUBJECT IN THE AGENDA | DECISION OF THE COUNCIL |
|---|---|---|---|
| 24.10.2018 | | ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2018ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31.07.2018ம் செவ்வாய்க் கிழமை காலை 11.30 மணியளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்டம்.<br>தனி அலுவலர்,<br>ஜெயங்கொண்டம் நகராட்சி | |
| 31.07.2018 | 24 | **பொருள் எண். 1**<br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கிடக் கோரி கோரிக்கை மனு அளித்துள்ளனர். எனவே துப்புரவு பணியாளர்களுக்கான பாதுகாப்பு உபகரணங்களை தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., திருச்சி என்ற நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கும் அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் முன் அனுமதி வழங்கியதை ஏற்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 31.07.2018 | 25 | **பொருள் எண். 2**<br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 5 அவர்களின் கடித ந.க.எண்.12503/2018/ஆ1 நாள்:21.05.2018 ன் படியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 124 ன் படியும், வர்த்தகம் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றிற்கு தொழில்வரி வசூல் செய்யும் விதிகள் 1999 விதி 16 ன் படியும் ஜெயங்கொண்டம் நகராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள தொழில்வரி விகிதத்தினை 01.10.2018 முதல் ( 2018-19 இரண்டாம் அரையாண்டு முதல் ) 25% உயர்வு செய்திட இந்நகர் மன்ற தீர்மான எண்.9 நாள்:25.05.2018 ல் தீர்மானம் இயற்றப்பட்டு அத் தீர்மானத்தின் மீது பொதுமக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனையினை தினசரி நாளிதழில் 21.06.2018 அன்று அறிவிப்பு வெளியான 30 தினங்களுக்குள் தெரிவித்திட கோரப்பட்டது. பொதுமக்கள் எவரும் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை மேற்காணும் தினசரி நாளிதழில் அறிவிப்பு வெளியான 30 தினங்களுக்குள் தெரிவிக்காததால், இந்நகர்மன்ற தீர்மான எண்.9 நாள்.25.05.2018 ல் நடைமுறையில் உள்ள தொழில்வரி விகிதத்தில் 25% உயர்வு செய்திட தீர்மானம் இயற்றப்பட்டதை உறுதி செய்து மன்றம் அனுமதிக்கலாம்.<br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 475 / 2018 / அ1 | அனுமதிக்கப்பட்டது |
| 31.07.2018 | 26 | **பொருள் எண். 3 (26)**<br>ஜெயங்கொண்டம் நகராட்சியின் பேருந்து நிலையத்தில் பேருந்து நிலையத்தின் விரிவாக்கம் செய்திட கட்டுமான பணிகள் தொடர்ந்து நடைப்பெற்று வருவதால் இருசக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமையை 01.01.2019 முதல் 31.03.2019 முடிய மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்து வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |